**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
https://ngmtamil.in/
DOI: https://doi.org/10.63300/kijts04052026

*Article Type: Original Research Article*

# Poet Vairamuthu: Environmental Thoughts in the Poem 'Neer'

**Dr. ESWARAN P*,**

Assistant Professor & Head, Department of Tamil, Govt. college for women, Vazhuthacaud, Thiruvananthapuram - 695014. Kerala.

*Correspondence: p.eswarpala@gmail.com, Tel: +918608977892

**Received**: 22-01-2026; **Revised**: 24-01-2026; **Accepted**: 27-01-2026; **Published**: 01-02-2026

**Abstract:** 'Water' (Neer) is one of the "Great Poems" (Maha Kavithai) written by the poet Vairamuthu. This is a long-form poem spanning fifty-four pages. Despite its length, the poem maintains a brisk and engaging pace that prevents the reader from feeling weary. In this work, the poet records vital ideas for the current generation through the lens of environmental consciousness. He illustrates how humans pollute essential water sources such as rivers, wells, and ponds—which serve as primary sources of drinking water—within this modern computer age.

Accordingly, this article analyzes the indispensability of water and how the pollution of rivers like the Ganges and Yamuna (famed for their sanctity), as well as wells and ponds, by sewage, industrial waste, chemicals, and dye factory effluents, leads not only to the contamination of drinking water but also to the degradation of the environment..

**Keywords:** Vairamuthu, Water, Poetry, Water and the Thirst for Life, Rain is God, Water as the Womb's Amniotic Sac, The Relationship Between Humans and Water, Water and its Disguises, The Avatars of Water, Mixing of Sewage in Rivers.

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

# கவிஞர் வைரமுத்து 'நீர்' கவிதையில் சுற்றுச்சூழல் சிந்தனைகள்

***முனைவர் ஈஸ்வரன் பா,** உதவிப் பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர், அரசு மகளிர் கல்லூரி, வழுதைக்காடு, திருவனந்தபுரம் – 695014.

**ஆய்வுச் சுருக்கம்**

கவிஞர் வைரமுத்து எழுதிய "மகா கவிதை"களில் ஒன்று 'நீர்' கவிதை. இக்கவிதை ஐம்பத்தி நான்கு பக்கங்களையுடைய நீண்ட கவிதையாகும். அதிக அடிகளைக் கொண்ட கவிதை என்றாலும் படிப்பதற்குச் சலிப்பு ஏற்படாமல் விறுவிறுப்பாகச் இருக்கிறது. இக்கவிதையில் இன்றைய காலகட்ட தலைமுறையினருக்கான முக்கியமான கருத்துகளைச் சுற்றுச்சூழல் சிந்தனையோடு பதிவு செய்துள்ளார். கணினியுக காலகட்டத்தில் நீரின் முக்கியத்துவம், குடிதண்ணீருக்குப் பயன்படும் நீர் ஆதாரங்களாக விளங்கும் நதிகள், ஆறுகள், கிணறுகள். குளங்கள் ஆகிய வளங்களை மனிதர்கள் எவ்வாறெல்லாம் மாசுபடுத்துகின்றனர் என்பதைப் பற்றிய கருத்துக்களைக் கவிதையில் எடுத்தியம்பியுள்ளார். ஆதலால், தண்ணீரின் இன்றியமையாமை, புனிதத்திற்குப் பெயர்போன கங்கை, யமுனை நதிகளிலும் ஆறுகளிலும் கிணறுகளிலும் குளங்களிலும் சாக்கடை, தொழில்சாலைக் கழிவுகள், இரசாயனம், சாயப்பட்டறைக் கழிவுகள் கலப்பதால் குடிதண்ணீர் மாசுபடுவதோடு மட்டுமல்லாமல் சுற்றுச்சூழலும் பாதிப்பிற்குள்ளாகிறது என்பதைப் பற்றிய ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**முக்கியச் சொற்கள் :** *வைரமுத்து, நீர், கவிதை, தண்ணீரும் உயிர்த்தாகமும், மழையே கடவுள், தாயின் கருவறையில் தண்ணீர் குடமாய், மனிதனுக்கும் நீருக்குமுள்ள உறவு, தண்ணீரும் மாறுவேடமும், நீரின் அவதாரங்கள், நதிகளில் சாக்கடைக் கழிவுநீர் கலத்தல்.*

**முன்னுரை:**

கவிஞர் வைரமுத்து எழுதிய மகா கவிதைகளில் ஒன்று 'நீர்' கவிதை. இக்கவிதை ஐம்பத்தி நான்கு பக்கங்களையுடைய நீண்ட கவிதையாகும். அதிக அடிகளைக் கொண்ட கவிதை எனினும் படிப்பதற்குச் சலிப்புத்தட்டால் விறுவிறுப்பாகச் செல்லுகிறது. இந்தக் கவிதையில் இன்றைய இளைய தலைமுறையினருக்கான சிறந்த கருத்துகளைச் சுற்றுச்சூழல் சிந்தனையோடு திறம்படப் பதிவு செய்துள்ளார். இன்றைய நவீன கணினியுக காலகட்டத்தில் நீரின் முக்கியத்துவம் பற்றியும், குடிதண்ணீருக்குப் பயன்படும் நீர் ஆதாரங்களாக விளங்கும் நதிகள், ஆறுகள், கிணறுகள். குளங்கள் ஆகியவற்றை மனிதர்கள் எவ்வாறெல்லாம் மாசுபடுத்துகின்றனர் என்பதைப் பற்றியும் கருத்துக்களை கவிதையில் திறம்பட எடுத்தியம்பியுள்ளார். ஆகையால், தண்ணீரின் இன்றியமையாமை, புனிதம் என்று சொல்லப்படுகின்ற அல்லது புனிதத்திற்குப் பெயர்போன கங்கை, யமுனை நதிகளிலும் ஆறுகளிலும் கிணறுகளிலும் குளங்களிலும் சாக்கடை, தொழில்சாலைக் கழிவுகள், இரசாயனம்,

சாயப்பட்டறைக் கழிவுகள் கலத்தலால் குடிதண்ணீர் மாசுபடுவதோடு சுற்றுச்சூழலும் பாதிப்படைகின்றது என்பதைப் பற்றிய செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கவிப்பேரரசு வைரமுத்துவைப் பற்றிய செய்திகள்**

கவிஞர் இரா. வைரமுத்து தேனி மாவட்டத்திலுள்ள பெரியகுளம் அருகில் வடுகபட்டி கிராமத்தில் இராமசாமி – அங்கம்மாள் என்பவருக்கு 13.07.1953ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர். இவரின் மனைவி பெயர் பொன்மணி. மகன்கள் கார்க்கி, கபிலன். வைரமுத்து சென்னையிலுள்ள பச்சையப்பன் கல்லூரியில் தமிழ் இலக்கியம் பயின்றவர். 1980 ஆம் ஆண்டு நிழல்கள் திரைப்படத்தில் ‘இது ஒரு பொன்மாலைப் பொழுது’ எனத் தொடங்கும் பாடலை எழுதினார். சிறந்த பாடலாசிரியருக்கான குடியரசுத் தலைவர் விருதினை 1985, 1993, 1994, 1999, 2002, 2010, 2016-ஆம் ஆண்டுகளில் பெற்றவர். கலைமாமணி விருது மற்றும் பத்மஸ்ரீ விருதினைப் பெற்ற சிறப்பிற்குரியவர்.

**வைரமுத்துவின் படைப்புகள்**

கவிஞர் இரா. வைரமுத்துவின் முக்கியமான கவிதைத் தொகுப்புகளாக “வைகறை மேகங்கள், திருத்தி எழுதிய தீர்ப்புகள், இன்னொரு தேசிய கீதம், எனது பழைய பனையோலைகள், கவிராஜன் கதை, இரத்த தானம், இந்தப்பூக்கள் விற்பனைக்கல்ல, தமிழுக்கு நிறைமுண்டு, பெய்யெனப் பெய்யும் மழை, எல்லா நதிகளிலும் எங்கள் ஓடங்கள், கொடி மரத்தின் வேர்கள்”[1] ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவருடைய முக்கியமான கட்டுரைத் தொகுப்புகளாக “கல்வெட்டுகள், என் ஜன்னலின் வழியே, நேர் போட்ட கோலம், ஒரு மௌனத்தின் சப்தங்கள், சிற்பியே உன்னைச் செதுக்குகிறேன், வடுகபட்டி முதல் வால்கா வரை, இதனால் சகலமானவர்களுக்கும், இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள், கொஞ்சம் தேனீர் நிறைய வானம், தமிழாற்றுப்படை”[2] ஆகியவற்றைக் கூறலாம். மற்றும் இவர் எழுதிய புதினங்களாக “வானம் தொட்டுவிடும் தூரம்தான், மீண்டும் என் தொட்டிலுக்கு, வில்லோடு வா நிலவே, சிகரங்களை நோக்கி, ஒரு போர்க்களமும் இரண்டு பூக்களும், காவி நிறத்தில் ஒரு காதல், தண்ணீர் தேசம், கள்ளிக்காட்டு இதிகாசம், கருவாச்சி காவியம், மூன்றாம் உலகப்போர்”[3] ஆகியவற்றைக் கூறலாம். இதுமட்டுமல்லாமல் “இதுவரை நான்”[4] என்றும் தன்வரலாற்றையும் எழுதியுள்ளார்.

**தண்ணீரும் உயிர்த்தாகமும்**

மனிதன் பல காரணங்களில் பல சூழல்களில் ஒரு நாளில் மூன்று நேரம் கூட உணவில்லாமல் இருந்துவிடுகிறான். ஆனால், ஒரு நாளில் தண்ணீர் இல்லாமல் அவனால் இருக்க முடிவதில்லை. காரணம் நீருக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பாகும். மனிதனுக்குத் தண்ணீர்த்தாகம் வந்துவிட்டால் அவனுடைய இனிமையான தாய்மொழியைத் தன்னுடைய செவியல் கேட்டாலும், திரவத்தங்கமே

என்றாலும், ஜீவரத்தினமே என்றாலும், பெரும்பொருள் தருகிறேன் என்றாலும் அவனால் தண்ணீர்த் தாகத்தைப் பொறுத்துக்கொள்ள முடிவதில்லை. தண்ணீர் என்று சொன்னால் மட்டுமே அவனுடைய உயிர்த்தாகம் தணிகிறது என்பதனை,

**"மேக தேவதைகளின்**
**தாய்மொழியே என்றாலும்**
**பூமியிலிருந்து றெக்கை முளைத்து**
**பூமிக்கே வந்த**
**திரவத் தங்கமே என்றாலும்**
**……………………………**
**தண்ணீர் என்று சொன்னால்தான்**
**உயிர்த்தாகம்**
**தணிகிறது எமக்கு"[5]**

இக்கவிதையின் அடிகள் நமக்கு உணர்த்துகின்றன. எப்படிப்பட்ட கிட்டற்கரிய உயர்ந்த பொருளை ஒருவருக்குக் கொடுத்தாலும் தாகம் தீர்ந்துவிடாது. தண்ணீரைக் கொடுத்தால்தான் தாகம் தணியும் என்ற உண்மை நடப்பியலை கவிஞர் அழுகுற எடுத்துரைத்துள்ளார். அப்படிப்பட்ட தண்ணீரை திருவள்ளுவர் அமிழ்தம் என்றே கூறுகிறார். இதனை,

**"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**
**தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று."[6]**

என்னும் குறட்பா மூலம் அறிந்துகொள்ளலாம்.

**கடவுளின் கடவுள் தண்ணீர்**

தண்ணீருக்கு நிறமில்லை என்கிறது அறிவியல். வானத்திற்கு நிறத்தைத் தருகிறது தண்ணீர். நீருக்கு வடிவம் இல்லை. மண்ணிற்கு வடிவத்தைத் தருகிறது. கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்ற சந்தேகத்திற்கு இன்றுவரையிலும் முடிவில்லை. கடவுள் தூணிலும் இருப்பார் துரும்பிலும் இருப்பார் என்பது மக்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது. அந்தத் தூணிற்குள்ளும் துரும்பிற்குள்ளும் நுளைந்து தங்குவதால் தண்ணீர் கவுளின் கடவுளாகக் காட்சி தருகிறது. இதனை,

**"நிறமில்லை உனக்கு**
**நீதான் நிறமூட்டினாய் வானுக்கு**
**வடிவில்லை உனக்கு**
**நீதான் வடிவு தந்தாய் மண்ணுக்கு**
**எங்கே கடவுளென்ற**
**சலனச் சந்தேகம்**
**தீர்ந்தபாடில்லை இன்னும்**
**ஆனால்,**
**தூணோடும் துரும்போடும்**

**துளைத்தோடி உறைவதனால்**
**கடவுளுக்கும் ஐய்யுறாத**
**கடவுள் நீதான்"[7]**

என்னும் பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன. உண்மையில் தண்ணீர்த்தாகத்தைத் தீர்க்கின்றது தண்ணீர். நம் உயிருக்கு எது அடிப்படை மூலமோ அதுதான் கடவுளின் கடவுளாக இருக்க முடியும். அந்த வகையில் பொதுவாக உயர்திணை அஃறிணை என்ற பாகுபாடில்லாமல் அனைத்து உயிர்களுக்கும் உயிர் நாடியாக விளங்குபவை தண்ணீர்தான். தண்ணீர் இல்லையென்றால் இந்த உலக உயிர்கள் இயங்காது என்பது திண்ணம்.

**மழையே கடவுள்**

உலகப்பொதுமறையை இயற்றிய வள்ளுவன் 133 அதிகாரங்களில் 1330 குறட்பாக்களை நமக்குத் தந்துள்ளார். பெரும்பான்மையாக முதலில் எந்தவொரு காரியத்தையும் தொடங்குவதற்கு முன்பாகக் கவுளை நினைத்து வணங்கித்தான் செயல்களைச் செய்வோம். இவற்றில் மதபேதமில்லை. அவ்வகையில் திருவள்ளுவரும் தான் இயற்றிய முப்பாலில் முதல் அதிகாரமாகக் கடவுளை வணங்குதல் பொருட்டு கடவுள் வாழ்த்தை வைத்துள்ளார். இதற்கு அடுத்தபடியாக எந்தவொரு அதிகாரத்தையும் வைத்திருக்கலாம். ஆனால், சிறப்பு கருதி 'வான்சிறப்பு' என்ற அதிகாரத்தை வைத்துளார் என்று வைரமுத்து கூறுகிறார். இதனை,

**"சில பொழுதுகளில்**
**கடவுள் ஆசனத்தில்**
**மழை அமர்வதை**
**ஆகம விதிகள் ஆட்சேபதித்ததில்லை**
**வள்ளுவ ஞானியும்**
**கடவுள் வாழ்த்தருகே**
**வான்சிறப்பு வைத்தனன் ஏன்?**
**முதல் அதிகாரம் கிழிந்துபடில்**
**மழையே கடவுளாகும்**
**சகல சாத்தியம் கருதித்தான்"[8]**

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. ஒருவேளை கடவுள் வாழ்த்து அழிந்து விட்டால்கூடப் போகட்டும் அந்த இடத்தை நிரப்புவதற்கு வானம் பொழியும் மழையின் சிறப்பை நினைவில் வைத்துதான் 'வான்சிறப்பு' என்னும் அதிகாரத்தை கடவுள் வாழ்த்தருகில் வைத்துள்ளார் என்ற காரணகாரியத்தைக் கூறுகிறார்.

**தாயின் கருவறையில் தண்ணீர் குடமாய்**

மனிதனுடைய அன்றாட வாழ்க்கையில் தண்ணீர் எந்த அளவிற்கு முக்கிய இடம் வகிக்கின்றது என்பதை அனைவரும் அறிவோம். மனிதன் வாழ்வதற்கு மட்டுமல்லாமல் தாயின் கருவைறையில் சிசு உருவாவதற்கும் உயிர் நாடியாக விளங்குவது தண்ணீர்தான். இதனை,

**"தாயின் கருப்பையில்**
**நீச்சலடிக்கவும்**
**மிதந்து வெளியேறவும்**
**சிசுவுக்குத்**
**தண்ணீர்த் தொட்டிகட்டுகிறாய்"**[9]

உயிர் தாயின் கருவறையில் உருவாகி அக்கரு நன்றாக வளருவதற்கு தண்ணீர் குடமாக வடிவம் எடுக்கிறது. தண்ணீர் அவ்வாறு மாற்றமடைவதால் சிசு நீச்சலடித்து மிதந்து வெளி உலகத்திற்கு வருவதற்கு ஏதுவாக அமைகின்றது.

**மனிதனுக்கும் நீருக்குமுள்ள உறவு**

பொதுவாக அனைத்து உயிரினங்களுக்கும் பிறப்பில் தண்ணீர் பெரும்பங்காற்றினாலும் இறப்பின் பிறகு தண்ணீரின் அவசியம் பொரும்பாலும் இருப்பதில்லை. ஆனால், மனிதனுக்கும் நீருக்குமான உறவு பிறப்பு தொடங்கி இறப்பின் பின்பு வரை நீடிக்கிறது என்பதை,

**"தாய்க்குடம் உடைந்து**
**பிறக்கிறோம்**
**தண்ணீர்க்குடம் உடைத்து**
**முடிக்கிறோம்"**[10]

இந்நான்கு அடிகளில் தத்துவக் கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. தாயின் கருவறையிலுள்ள தண்ணீர்க்குடம் சிசுவிற்குப் பாதுகாப்பு அரணாக விளங்குகிறது. அதனால், சிசு உள்ளே பாதுகாப்பாக வளர்கிறது. நன்றாக வளர்ந்தவுடன் அக்குடம் உடைந்து சிசு வெளியேறுகிறது. இன்றைய அறிவியல் உலகில் இதனை இயற்கையின் அற்புதம் என்றே கூறலாம். மனிதன் குழந்தையாகப் பிறந்து வளர்ந்து வெளியுலகில் மனிதனாக வாழ்க்கையை முடித்து இறப்பினை எய்துகிறான். பிறப்பில் மட்டுமல்லாமல் இறப்பிலும் மனிதனுக்கு இடுகாட்டில் இறுதியாகத் தண்ணீர்க் குடம் உடைத்து சடங்கை நிறைவு செய்கிறார்கள். இதனை மக்கள் தந்தைக்குச் செய்யும் பிறப்புக்கடன் என்கிறார்கள்.

**தண்ணீரும் மாறுவேடமும்**

இரத்தமாகவும், உமிழ் நீராகவும், வேர்வையாகவும், விந்துவாகவும், கண்ணீராகவும் தண்ணீரானது பல்வேறு மாறுவேடங்களைக் கொள்கிறது என்று வைரமுத்து தன்னுடைய கவிதையடிகளில் உலகியல் எதார்த்தத்தை நயமுடன் வாசகர்களுக்கு எடுத்துரைக்கிறன்றார்.

**"உயிர்த்தபோது**
**உடல் கொடுத்தது ரத்தம்**
**புசித்தபோது**
**பசிகிளர்த்தியது உமிழ்நீர்**
**உழைத்தபோது**
**நிலம் விளைத்தது வேர்வை**
**கலந்தநேரம்**
**வம்சம் வார்த்தது விந்து**

**அழுத வேளை**
**மனிதம் வார்த்தது கண்ணீர்**
**ரத்தம் உமிழ்நீர்**
**வேர்வை விந்து**
**கண்ணீர் எல்லாம் வேறென்ன?**
**மாறுவேடம் பூண்ட தண்ணீர்”**[11]

என்னும் கவிதையடிகள் சான்றுபகர்கின்றன. பிறந்தபோது தண்ணீர் இரத்தமாக மாறி உடலைத் தருகிறது. பசி எடுக்க வைப்பதும் உணவு உண்ட பின்பு உணவைச் செறிக்க வைப்பதும் தண்ணீர் என்ற உமிழ் நீர்தான். உழைப்பதால் தண்ணீர் வியர்வையாக மாறுகிறது உழைப்பால் நிலம் விளைச்சலைத்தருகிறது. ஆணும் பெண்ணும் இணைந்தபோது தண்ணீர் விந்துவாக மாறி வம்சத்தை விருத்தியாக்குகிறது. அழுகின்ற போது தண்ணீர் கண்ணீராக மாறி இரக்கத்தை வெளிப்படுத்துகிறது.

**நீரின் அவதாரங்கள்**

நீரானது உணவாக, காற்றாக, பயிரின் நிறமாக, அருவியாக, ஆறாக, கடலாக, பனிக்கட்டியாக, மேகமாக இவ்வாறு வொவ்வொரு நிலைகளிலும் வெவ்வேறு அவதாரங்களை எடுக்கிறது என்பதனை,

**“உண்ணும் உணவாய்ப்**
**பருகும் காற்றாய்**
**உயிரின் உயிராய்**
**பயிரின் நிறமாய்**
**ஒன்றுமாய் இரண்டுமாய் பலவாய்**
**ஒவ்வொரு நிலையிலும்**
**வெவ்வேறு அவதாரம் கொள்கிறாய்**
**நீ**
**நின்ற நிலை அருவி**
**நடந்த நிலை ஆறு**
**கிடந்த நிலை கடல்**
**உறைந்த நிலை பனிக்கட்டி**
**உலவு நிலைமேகம்”**[12]

மேற்காணும் பாடலடிகள் உணர்த்துகின்றன. உணவு, காற்று, பயிரின் நிறம், அருவி, ஆறு, கடல், பனிக்கட்டி, மேகம் இவையெல்லாம் நீராக இருந்தாலும் மலைமேலிருந்து கீழாக வரும் நீரை அருவி என்கிறோம். அதே நீர் தரையில் கீழே ஓடினால் ஆறு என்கிறோம். அதுவே சமமாகப் பரந்த நிலையில் கிடந்தால் கடல் என்கிறோம். அந்நீர் உறைந்த நிலையில் இருந்தால் பனிக்கட்டி என்கிறோம். அதே நீர் ஆவியாகி வானத்தில் உலவும்போது அதனை மேகம் என்கிறோம். இப்படி நீரானது பலபெயர்களைப் பெற்று அண்டத்தில் உலாவும் சிறப்பினைப் பெறுகிறது. இவ்வாறு

மாறுவேடம் பூண்ட தண்ணீரானது மனிதர்கள் உண்பதற்கான உணவினை விளைவித்துத் தருவதோடு நின்றுவிடாமல் தானும் தாகம் தீர்க்கும் உணவாக அமைகின்றது என்பதனை,

**“துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்**
**துப்பாய தூஉம் மழை”[13]**

மேற்காணும் குறட்பா சான்றுபகர்கின்றது.

**நீரின் மகத்துவமும் மனிதனின் இழிவும்**

தண்ணீர்த்தாகம் எடுத்து நாவு வரண்டு உதடு காய்ந்து வெடிக்கும் போது நாவை வைத்து உதட்டை ஈரப்படுத்திக்கொள்ளும்போது மனிதன் தண்ணீரின் மகத்துவத்தை அறிவதில்லை. ஆனால், மயக்கமடைந்து சாவின் எல்லைவரைப் போனவனைத் தண்ணீர் தெளித்து உயிர் வரவழைத்தபோது நீரின் முக்கியத்துவத்தை உணர்கிறான். அந்நிலையில் மட்டுந்தான் தண்ணீர் கடவுள் அனுப்பி வைத்த தூதுவன் என்று நினைக்கிறான். மற்ற நேரங்களில் தண்ணீரை எப்படியெல்லாம் மாசுபடுத்துகிறான் என்பதனை,

**“ஒரு சொட்டு நீருமின்றி**
**உதடுவெடிக்க**
**நாவைத் தூக்கி**
**உதட்டுக்கு ஈரப்பசை**
**பூசும் போதும்**
**உணரப்படாத உன் பெருமை**
**மூர்ச்சையுற்ற முகத்தில்**
**உன்னைத் தெளித்ததும்**
**சாவுவரை போனவன்**
**வாழ்வின் வழி திரும்புகையில்**
**உணரப்படுகிறது**
**………………………………**
**உன்**
**சிறுநீரகத்தை இப்படிச்**
**சிதைத்திருக்கக் கூடாது**
**கடவுளின் கண்ணீரில்**
**கழிவுநீர் கலந்திருக்கக் கூடாது”[14]**

மேற்காணும் பாடலடிகளின் மூலம் அறிந்துகொள்ளமுடிகின்றது. மனிதன் தன்தேவையிருந்தால் மதிப்பான் இல்லையெனில் மிதிப்பான் என்னும் சில மனிதர்களுடைய இயல்பான இழிகுணத்தை இக்கவிதை எடுத்துரைக்கின்றது. மனிதனுக்கு எப்படி கல்லீரலும் சிறுநீரகமும் முக்கியமோ அதுபோலத் தண்ணீர் உலக உயிரினங்களுக்கு முக்கியமானது. குடிதண்ணீரில் மனிதன் கழிவு நீரைக் கலக்கச் செய்வதனைக் கவிஞர் சாடுகின்றார்.

**நதிகளில் சாக்கடைக்கழிவு நீர் கலத்தல்**

குடிநீருக்குப் பயன்பட்ட அழகான நதிகளில் சாக்கடைக்கழிவு நீரை மனிதன் கலந்துவிடுகிறான். அதனால், நதிநீர் துர்நாற்றம் எடுக்கின்றது. அவற்றில் பாம்பு நுரையோடு ஓடுகின்றது. மலைப்பாம்பு செத்துக்கிடக்கின்றது. நதியின் நிறம் கருப்பாகிவிட்டது. நீருக்கு நிறமில்லை என்ற விஞ்ஞான விதியை மனிதன் பொய்யாக்கிவிட்டான். இதுமட்டுமல்லாமல் நதிகளில் மணல்கொள்ளை. மண்டியிட்டு நீர் குடித்த மகாநதி இன்று பன்றிகளின் பள்ளியறையாய் ஆகிவிட்டது. இதனை,

**"கழிவுப்பள்ளத்தில் நாறுகிறது**
**வளைந்தோடிய சௌந்தர்யம்**
**ஒவ்வோர் ஊரின்**
**பக்கவாட்டிலும்**
**கடைவாயில் நுரையோடு**
**பாம்போடுகிறது**
**சில ஊர்களில்**
**செத்த மலைப்பாம்பு**
**படுத்தே கிடக்கிறது**
**..........................**
**குடிநீரின் ஊற்றாய் இருந்த நதி**
**கழிவுகளின் கால்வாயாய்**
**மண்டியிட்டு நீர்குடித்த**
**மகாநதி இன்று**
**பன்றிகளின் பள்ளியறையாய்...**
**பாறை மறைந்து**
**மணல் மின்னும் காலம்போய்**
**மணல் மறைந்து பாறைகளாய்..."**[15]

என்னும் பாடலடிகள் சான்றுபகர்கின்றன. அக்காலத்தில் நதி நீர் எவ்வாறு இருந்தது. மக்கள் அதனை எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார் வைரமுத்து. அதேபோல் மனிதன் இன்றைய காலகட்டத்தில் நதிநீரை மாசுபடுத்துவதால் நதிநீர் நிறம் கருப்பாவதும் அதனால் நதிகளில் பாம்புகள் செத்துக்கிடப்பதையும் மணல் கொள்ளையடிக்கப்படுவதையும் எடுத்துக்காட்டுவதோடு, மனிதர்கள் இவ்வாறு செயல்பட்டால் எதிர்காலத்தில் தண்ணீருக்குப்பதில் எதைக்குடிப்பார்கள் என்று சிந்திக்கவும் வைக்கிறார்.

**இரசாயனக் கழிவு**

நீருக்கு நிறமில்லை என்கிறது நமது விஞ்ஞானம். ஆனால், நதிகளின் நிறம் வெண்மையாகக் காட்சியளிக்கிறது. காரணம் ரசாயனக் கழிவு நீர் கலப்பதால் நிதி வெண்மை நிறமாகக் காணப்படுகிறது. இதனை வெள்ளைக்கொடி ஏந்திவரும் நவீன யுத்தம் என்றே கூறலாம்.

**"சில ஊர்களில்**

**நதியின் நிறம்**
**வெள்ளை நுரைகளாய்**
**விஷச் சிறகுகளாய்**
**வெள்ளைக்கொடி ஏந்திவரும்**
**யுத்தமாய்**
**வெகு பயங்கரம்**
**அதை**
**ரசாயனக் கழிவு என்பது**
**பல்கலைக் கழகங்களின்**
**விஞ்ஞானச் சொல்லாக்கம்"[16]**

இவ்வாறு நதிகளில் இரசாயனக் கழிவுகளைக் கலக்கச் செய்வது நமக்கு நாமே சாவுக்குழி வெட்டிக்கொள்கிறோம் என்றுதான் அர்த்தம். நாம் குடிக்கும் குடிநீர், உண்ணும் உணவுகள் எல்லாம் விசமாகத்தான் மாறும். விசத்தில் உருவான காய்கறி, அரிசி ஆகியவற்றை இன்றளவும் நாம் உட்கொண்டுதான் இருக்கிறோம். அதனால்தான் மனிதர்களுக்கு இவ்வளவு நோய்கள் ஏற்படுகின்றன என்பதை மானிடக்கூட்டம் சிந்திக்கவேண்டும்.

**சாயப்பட்டறைக் கழிவு**

இயற்கை நெசவு மறைந்து இயந்திர நெசவு உருவாகிய இன்றைய காலகட்டத்தில் ஆடை தயாரிக்க நூல்களுக்கு இரசாயனச் சாயத்தைப் பூசுகின்றனர். அதனுடைய கழிவுநீர் நிலத்தடி நீர்மட்டத்திற்குச் செல்கிறது. பின்பு கிணறுகளில் உள்ள ஊற்றுகளுக்கும் செல்கிறது. இதனால், கிணறுகளில் தண்ணீர் சிவப்பாகக் காட்சி தருகிறது என்பதை,

**"கிணறுகளின் ஊற்றுக் கண்களில்**
**சிவப்புச் சிவப்பாய்**
**ரத்தக்கண்ணீர்**
**அதைக் கழிவுச் சாயம் என்பது**
**'பண்டித' வழக்கு"[17]**

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. இவ்வாறு சாயப்பட்டறைக் கழிவுநீர் கிணற்று ஊற்றுகளில் கலப்பதால் விவசாய நிலங்கள் கெட்டுவிடுவதோடு மலட்டுத்தன்மை அடைகின்றது. அதனால் நெல், காய்கறி, கிழங்கு, தானிய விளைச்சல் ஆகியவை எதிர்காலத்தில் இல்லாமல் போய்விடும் என்பதைச் சாயப்பட்டறைத் தொழிற்சாலை முதலாளி வர்க்கமும் சிந்தித்துச் செயல்படவேண்டும்.

**தோல் தொழிற்சாலைக் கழிவு**

கோயிலும் குளமும் இல்லாத ஊர்களில் குடியிருக்க வேண்டும் என்பது முன்னோர் வழக்கு. ஊரில் கோயில் இருக்கிறதோ இல்லையோ குளம் இருக்கவேண்டும். ஏனென்றால் மனிதனின் அடிப்படைத் தேவையே தண்ணீர்தான். அக்காலத்தில் மழை நீரைச் சேகரிப்பதற்கு குளம் வெட்டி வைத்தார்கள். குளந்தான் அவ்வூருக்கு குடிநீர் மூலதனம். அப்படிப்பட்ட குளங்களில் தோல் தொழிற்சாலைக் கழிவுநீர் கலப்பதை,

**“சில ஊர்களின்**

**குடிநீர்க் குளங்களில்**

**மாமிசம் மணக்கிறது – அதைத்**

**தோல்கழிவு என்பது ‘தொன்மம்’ ”[18]**

என்னும் கவிதையடிகள் எடுத்துரைக்கின்றன. மக்கள் குடிநீருக்குப் பயன்படுத்தும் குளங்களில் தோல் தொழிற்சாலைக் கழிவுகள் கலப்பதால் மாமிச நாற்றம் ஏற்படுகிறது. இவ்வாறு நீர்நிலைகளை மாசுபடுத்தினால் காலநிலைகளில் மாற்றம் ஏற்பட்டு மழையும் பொய்த்துவிடும். மழைபொய்த்து விட்டால் உழவுத்தொழில் நடைபெறாது என்பதைப் பொய்யில்புலவர்,

**“ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்**

**வாரிவளம் குன்றிக் கால்.”[19]** என்னும் குறட்பாவில் எடுத்துரைக்கின்றார்.

**நாகரீகம் – அநாகரீகம்**

நம்மைச் சுற்றிலுமுள்ள நதிகளிலும் கிணறுகளிலும் குளங்களிலும் சாக்கடைக் கழிவுகளையும்,இரசாயனக் கழிவுகளையும் மாமிசக் கழிவுகளையும் கலக்கச் செய்து மாசுபடுத்துவது என்பது நமக்கு நாமே விசம் வைப்பது என்பதை,

**“நம்மைச் சுற்றி**

**நஞ்சுவைத்து**

**நாமே கொன்றுகொள்வதே**

**நாகரிகமாயின்**

**அநாகரிகம் என்பது**

**எத்துணை துக்கமோ?” [20]**

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன. நமக்கு நாமே தீங்கு விளைவித்துக்கொள்வது நாகரிகம் என்று கொண்டால் அநாகரிகம் என்பது எவ்வளவு கொடியவையாக இருக்கும் என்று கவிஞர் மனிதர்களைச் சிந்திக்க வைக்கிறார்.

**நீரின் கணக்கு**

மனிதன் நீரினை மாசுபடுத்தாமல் சிந்தித்துச் செயல்படவேண்டும் என்பதற்காக, நீரைப் பற்றிய ஒரு சிறிய கணக்கினை வைரமுத்து தன் கவிதையில் மனிதர்களுக்குக் காட்டுகிறார். இதனை,

**“ஒரு சின்னக் கணக்கு**

**அறிய வேண்டும்**

**……………….**

**மொத்த நீரில்**

**சுத்த நீரோ**

**மூன்றே விழுக்காடு**

**அதில் துருவங்களில் உறைந்தது**

**தொலையாழத்தில் மறைந்தது**

**ஒவ்வொரு விழுக்காடு**
**ஒரு விழுக்காடு மிச்சம்தான்**
**உயிர் வளர்க்க**
**பயிர் வளர்க்க**
**தொழில் வளர்க்க**
**தொகை வளர்க்க”**[21]

என்னும் பாடலடிகள் நிரூப்பிக்கின்றன. உலகம் மூன்று பக்கம் கடலாலும் ஒருபக்கம் நிலத்தாலும் சூழப்பட்டதாகும். இவ்வுலகில் தொண்ணூற்றேழு விழுக்காடு உப்புத் தண்ணீர், மூன்று விழுக்காடு மட்டுமே நல்ல தண்ணீர். அவற்றில் இரண்டு விழுக்காடு துருவங்களிலும் தொலையாழத்திலும் மறைந்துவிடுகிறது. மீதி ஒரு விழுக்காடு இருக்கும் தண்ணீரில்தான் நாம் உயிர் வளர்க்கவும், விவசாயம் செய்யவும், தொழில் செய்யவும் வேண்டும். ஆதலால், நீரினை எந்தளவிற்குப் பாதுகாப்பாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை மனிதர்கள் சிந்திக்க வேண்டும் என்கிறார் கவிஞர்.

**கவிஞரின் கண்டிப்பும் அறிவுரையும்**

நல்ல நீரை மாசுபடுத்திவிட்டால் குடிப்பதற்கு எந்த நீரைக் குடிக்கமுடியும். உணவுப் பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் கோதுமையை இறக்குமதி செய்தோம். ஆனால், அதைப்போன்று தண்ணீரை இறக்குமதி செய்ய முடியாது. பூமியைத் தவிர வேறு எந்த நீர்க்கோளமும் இல்லை. சூரியக்குடும்பத்தில் உள்ள ஏழு கோள்களும் பாழும் பாறைகளாக இருக்கிறது என்பதை,

**“தண்ணீரையெல்லாம்**
**நஞ்சூட்டிவிடில்**
**மாற்று பானமாய்**
**ஏதருந்துவாய்?**
**பூமியைத் தவிர**
**நீர்க்கோள் உண்டா?**

**…………………….**

**தொலையாடிக்கெட்டிய**
**தொலைவு மட்டும்**
**தண்ணீர்க்கோள் ஏதுமில்லை**
**சூரியக் குடும்பத்தில்**
**ஏழு கோள்களும்**
**பாழும் பாறைகள்.”**[22]

மேற்காணும் பாடலடிகள் சான்றுபகர்கின்றன. இறக்குமதி செய்யமுடியாத ஒரு பொருள் தண்ணீர். பூமியைத் தவிர வேறு எந்தக்கோள்களிலும் தண்ணீர் இருப்பதாக இதுவரை அறிவியல் கண்டுபிடிப்பில்லை என்பதை கவிஞர் தமது கவிதையடிகளில் நடப்பியல் உண்மைகளை எடுத்துரைத்துள்ளார். தண்ணீரை நஞ்சாக மாற்றும்போது கடல் நீரினை முகர்ந்துகொண்டு போகும்

மேகம் மீண்டும் மண்ணிற்குத் திரும்ப வரவில்லை என்றால் உலகில் மூன்று பங்குள்ள கடல் வளமும் குன்றிவிடும் என்று எச்சரிக்கை செய்கிறார் பெருநாவலர். இதனை,

**“நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி**
**தான்நல்கா தாகி விடின்.”[23]**

என்னும் குறட்பா சான்றுபகர்கின்றது.

**முடிவுரை**

நீரின் இன்றியமையாமை குறித்தும் குடிதண்ணீரின் முக்கியத்துவத்தைப் பற்றியும் கவிஞர் நயமுற எடுத்துரைக்கிறார். மனிதர்கள் நதிகளில் கிணறுகளில் குளங்களில் சாக்கடைகளையும் தொழிற்சாலைக் கழிவுகளையும் இரசாயனத்தையும் கலக்கச்செய்து தண்ணீரை மாசுபடுத்துதை வைரமுத்து தமது ‘மகா கவிதை’ என்ற நூலில் இடம்பெற்றுள்ள ‘நீர்’ கவிதையின் வாயிலாகக் காட்சிகளைக் கண்முன் கொண்டுவந்து எச்சரிக்கையும் விடுக்கின்றார்.

அதுமட்டுமல்லாமல் நமக்கு இருக்கின்ற மூன்று விழுக்காடு நல்ல தண்ணீரில் ஒரு விழுக்காடு தண்ணீரை மட்டுந்தான் எளிதாக நாம் பயன்படுத்தக்கூடிய அளவில் இருக்கிறது. அதனால், குடிநீரை மானிடக்கூட்டம் மாசுபடுத்தினால் எதிர்காலத்தில் எந்நீரைக் குடிக்கமுடியும் என்று வசைபாடி சிந்திக்கவும் வைக்கிறார்.

அதுபோல திருவள்ளுப்பெருமானும் திருக்குறள் பாயிரத்தில் இடம்பெற்றுள்ள ‘வான்சிறப்பு’ என்னும் அதிகாரத்தில் மழையின் சிறப்பினை எடுத்தியம்புகிறார். அதனால், கணினியுகத்தில் வாழ்கின்ற நாம் நீர் நிலைகளை மாசுபடுத்தாமல் சிந்துத்துச் செயல்படவேண்டும் என்பது கவிஞரின் சாடலாகவும் வேண்டுகோளாகவும் அமைவதைக் கவிதையடிகளில் காணமுடிகின்றது.

**குறிப்புகள்:**

1. wikipedia.org.
2. wikipedia.org.
3. wikipedia.org.
4. wikipedia.org.
5. வைரமுத்து. மகாகவிதை, ப.75
6. சிற்பி பாலசுப்பிரமணியம் உரை, திருக்குறள் பாயிரம், வான்சிறப்பு. ப.4.
7. வைரமுத்து. மகாகவிதை, ப.76
8. மேலது. ப.81
9. மேலது., ப.81

10. மேலது., ப.83
11. மேலது., ப.83
12. மேலது., ப.83
13. சிற்பி பாலசுப்பிரமணியம் உரை, திருக்குறள் பாயிரம், வான்சிறப்பு. ப.4.
14. வைரமுத்து. மகாகவிதை, ப.95
15. மேலது., பக்.96-97.
16. மேலது., ப.98
17. மேலது., ப.97
18. மேலது., ப.98
19. சிற்பி பாலசுப்பிரமணியம் உரை, திருக்குறள் பாயிரம், வான்சிறப்பு. ப.4.
20. வைரமுத்து. மகாகவிதை, ப.99
21. மேலது., பக்.99-100.
22. மேலது., பக்.100-101.
23. சிற்பி பாலசுப்பிரமணியம் உரை, திருக்குறள் பாயிரம், வான்சிறப்பு. ப.5.

References – **துணைநூற்பட்டியல் :**


1. வைரமுத்து, ஜனவரி 2024. மகா கவிதை, சூர்யா லிட்ரேச்சர் (பி)லிட், சென்னை – 600090, (Vairamuthu, January 2024. Maha Kavithai, Surya Literature (P)Lit, Chennai – 600090)
2. கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் அக்.2012, திருக்குறள், தாமரை பதிப்பகம், 41-பி சிட்கோ தொழிற்சாலை, அம்பத்தூர், சென்னை-600050. (Poet and sculptor Balasubramaniam Oct. 2012, Thirukkural, Thamarai Publishing House, 41-B CITCO Factory, Ambattur, Chennai-600050.)
3. Wikipedia.org.